**மலர்கள்**

**லில்லி**

1. **இலைப்பேன், திரிபஸ் சிம்ப்லக்ஸ்**

**சேதத்தின் அறிகுறி:**

- லில்லி மலர்களும், கிழங்குகளும் நிறம் மாறி காணப்படும்
- தாக்கப்பட்ட மொட்டுகள் விரியாமல் மூடியிருக்கும்
- இலைகளில் வெள்ளைக் கோடுகள் காணப்படும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டைகள் இலை திசுக்களின் இடையிலிருக்கும், வெள்ளை நிறமாகவும், அவரை வடிவாகவும் காணப்படும்
- பூச்சிகள் முதலில் வெள்ளை நிறமாகவும், பின்பு வெளுப்பு நிறமாகவும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட கிழங்குகளை 2 டிகிரி செல்சியஸில் 6 வாரம் வைக்கவும்
- கிழங்குகளில் வென்நீர் நேர்த்தி 46 டிகிரி செல்சியஸில் செய்தால் இலைப்பேன் கட்டுப்படுத்தலாம்
- மிதைல் பாரத்தியான் 1 மி.லி (அ) என்டோசல்பான் 2 மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்

- 10 நாட்களுக்கு ஒருமுறை அசபேட் 0.1 சதவிதம் 2 - 3 முறை தெளிக்கலாம்

2. **இலைப்பேன், லியோதிரிப்ஸ் வனீகி :**

**சேதத்தின் அறிகுறி:**

- துரு வண்ண புள்ளிகள் வெதிலுக்கு அடியில் தோன்றும்
- தாவரங்கள் குன்றி காணப்படும்
- மலர்கள் அழுகிப்போய்விடும்

**பூச்சியின் விபரம்:**

மஞ்சள் மற்றும் கருப்பு நிறத்தில் காணப்படும்.

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்கப்பட்ட கிழங்குகளை 2 டிகிரி செல்சியஸில் 6 வாரம் வைக்கவும்
- கிழங்குகளில் வென்நீர் நேர்த்தி 46 டிகிரி செல்சியஸில் செய்தால் இலைப்பேன் கட்டுப்படுத்தலாம்
- மிதைல் பாரத்தியான் 1 மி.லி (அ) என்டோசல்பான் 2 மி.லி / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கவும்
- 10 நாட்களுக்கு ஒருமுறை அசபேட் 0.1 சதவிதம் 2 - 3 முறை தெளிக்கலாம்.

3. **லில்லி கிழங்கு சிலந்தி, ரைசோகிலைபஸ் எகினோபஸ்:**

**சேதத்தின் அறிகுறி:**

- வேர்களையும் கிழங்குகளையும் உண்டு சேதப்படுத்தும்

- செதில்களை சேதப்படுத்தி தண்டுக்குள் நுழைந்துவிடும்
- தாக்கப்பட்ட இலைகளும் தண்டுகளும் மஞ்சலாக மாறிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- சிறிதாகவும், கண்களுக்கு தெரியும்
- மஞ்சள் நிறத்தில் காணப்படும்
- இளஞ்சிவப்பு நிறத்திலும், பாசி போன்றும், மன்னும் மற்றும் மெதுவாக நகரும்.

**கட்டுப்படுத்தும் முறை:**

- மக்கு போடலாம்
- கிழங்குகளை வெந்நீரில் 60 டிகிரி செல்சியஸில் 2 நிமிடம் கொதிக்க வைக்கலாம்
- நெல் பயிருடன் மாற்றுப்பயிரிடலாம்
- சனப்பையை உழுதுவிடலாம்
- வெதுவெதுப்பான நீர் (அ) இரசாயன நேர்த்தி கிழங்குகளுக்கு செய்யலாம்
- டைக்கோகால் 0.025 - 0.04 சதவிதம் மற்றும் மோனோகுரோட்டோபாஸ் 0.04 சதவிதம் 15 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கலாம்

**4.பச்சை பீச் அசுவிணி, மைசஸ் பெர்சிகே:**

(காலிபிளவரில் காண்க)

5. **டியுலிப் கிழங்கு அசுவிணி, டைசேபிஸ் டியுலிபே**

**சேதத்தின் அறிகுறி:**

- இளம் தளிர் வளர்வதை சிதைத்து, அதன் தோற்றத்தை கெடுத்துவிடும்
- குஞ்சுகளும் பூச்சிகளும் இலைகளின் சாறை உறிஞ்சும்
- இலைகள் இளம் மஞ்சள் நிறத்தில் காணப்படும்
- இலைகள் சுருண்டு காணப்படும்
- தாவரங்கள் வளைந்து விடும்

**பூச்சியின் விபரம்:**

- சாம்பல் மற்றும் மெழுகு போல் காட்சியளிக்கும்
- கிழங்குக்கு கீழ் பகுதியில் கூடியிருக்கும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- டைமிதோயேட் 2 மி.லி / லிட்டர் (அ) மிதைல் டெமட்டான் 2மி.லி / லிட்டர் (அ) மாலத்தியான் 2மி.லி / லிட்டர் தெளிக்கவும்
- கிரைசோபா இரைவிழுங்கியை விடவும்
- அபலினஸ் வகை ஒட்டுண்ணியை பாதுகாக்கலாம்

6. **இலைப்புழு, (பாலிடெலா குளோரியோசா)**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளை புழுக்கள் உண்ணும்

**பூச்சியின் விபரம்:**

- புழு கருப்பு நிறத்தில் செம் புள்ளிகளைக் கொண்டு காணப்படும்
- அந்துப்பூச்சி பழுப்பு நிறமாகவும், மஞ்சள் மற்றும் சிவப்பு குறியீட்டுகளுடனும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களை கையால் பொறுக்கி அழிக்கலாம்
- கோடை உழவு செய்ய வேண்டும்
- வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிதம் தெளிக்கவும்.